# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 16.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

*[2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 59/2004*

**2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளின் விளைவாந் தன்மையனவான குறித்தசில அறவீடுகளை விதிப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அத னோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

பாகம் I

**சமூகப் பொறுப்புடைமை அறவீட்டை விதிப்பனவு செய்தல்**

**2.** இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடப்படற்பாலனவான எல்லா வரிகள் மற்றும் அறவீடுகள் மீதும் சமூகப் பொறுப்புடைமை அறவீடு என அழைக்கப்பட வேண்டிய அறவீடொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2005 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஆண்டிலிருந்தும் அத்துடன் அதன் பின்னர் ஒவ்வோராண்டும் 0.25 சதவீதப்படி விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும். சமூகப் பொறுப்புடைமை அறவீடு என்றவகையில் அவ்வாறு திரட்டப்படும் நிதிகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர்களுக்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குச் செலவீடு செய்யப்படுதல் வேண்டும் : சமூகப் பொறுப்புடைமை அறவீட்டை விதிப்பனவு செய்தல்.

ஆயின், 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அறவிடப்படற்பாலதான வருமானவரியின்மீது இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடு களின் நியதிகளின்படி சமுகப் பொறுப்புடைமை அறவீட்டின் விதிப்பனவானது 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதி யிலிருந்து பயனுறுவதாதல் வேண்டும்.

*சமூகப் பொறுப் புடைமை அறவீடு இயைபான அதிகாரிகளால் திரட்டப்படுதல் வேண்டும்.*

**3.** இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி திரட்டப்படற்பால தான சமூகப் பொறுப்புடைமை அறவீடானது இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்த கைய சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் இயைபான அதிகாரிகளால் அத்தகைய வரிகளின் அல்லது அறவீடுகளின் கொடுப்பனவின் நேரத்தில் திரட்டப்படுதல் வேண்டும். அவ்வாறு திரட்டப்படும் பணம் இயைபான அதிகாரிகளால் அத்தகைய பணம் திரட்டப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் திரட்டுநிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

*பதிவேடுகளைப் பேணுதல்.*

**4.** முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக் கங்களை நிருவகிக்கும் இயைபான அதிகாரி ஒவ்வொருவரும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அந்தந்த சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய அதிகாரிகளால் விதிக்கப்படற்பாலதான சமூகப் பொறுப்புடைமை அறவீடு தொடர்பில் அத்தகைய அதிகாரிகளால் திரட்டப்படும் எல்லாத் தொகைகளினதும் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

*அறவீட்டைச் செலுத்தத் தவறிய விடயங்களிலான வழக்கு.*

**5.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத் தாகும் எந்த ஆள் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி சமூகப் பொறுப்புடைமை அறவீட்டின் முழுத் தொகையையும் செலுத்தத் தவறுகின்றாரோ அந்த ஆளெவரும் தவணை தவறுநர் ஒருவரா கக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தவணை தவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபையின் தவிசாளர் அல்லது எவரேனும் பணிப்பாளர் அல்லது முதன்மை அலுவலர் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒரு தவணைதவறுநராகக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்பு செலுத்தப்படாததான அத்தகைய அறவீடும் தவணைதவறியதொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணைதவறுநரானவர், தவணை தவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டுடன் சேர்த்து பின்வருமாறு கணிப்பிடப்பட்ட மிகையிறுப்பனவொன்றையும் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(அ) இரண்டாம் பிரிவின் கீழான அறவீட்டின் கொடுப்பனவுக்குரிய தேதியிலிருந்து அடுத்துறும் ஒரு மாத காலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்திற்கு தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்து சதவீதப்படி ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுப்பனவுக்குரிய தேதியிலிருந்து அடுத்துறும் ஒரு மாத காலப்பகுதி ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பாகத்திற்கு தவணைதவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதப்படி,

ஆவதுடன் அத்தகைய மிகையிறுப்பனவானது இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் இயைபான அதிகாரிகளால் திரட்டப்படுதலும் வேண்டும்.

(3) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குத் தவணைதவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டை அல்லது அத்தகைய பாகத்தை அதன்மீது திரண்டுள்ள மிகையிறுப்பனவுத் தொகையுடன் சேர்த்து இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான விதத்தில் அறவிடுவதற்கு முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் இயைபான அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் இயைபான அதிகாரிகள் தவணைதவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டை அதன்மீது திரண்டிருக்கும் மிகையிறுப்பனவுத் தொகையுடன் சேர்த்து அறவிடுவதற்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவணைதவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரட்டியிருக்கும் மிகையிறுப்பனவுத் தொகையையும் அறவிடுவதற்கு வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இயைபான அதிகாரிகளின் முன்னம்பற்றி தவணைதவறுநருக்கு அறிவிக்கும் அறிவித்தலொன்றை தவணைதவறுநருக்கு வழங்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் இயைபான அதிகாரிகள் தவணைதவறுநருக்கு அறிவித்தலை வழங்கி, ஆனால் தவணைதவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டுத் தொகையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுத் தொகையும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மூன்று வார காலப்பகுதி கழிந்துவிட்டபோதிலும் செலுத்தப்படாதிருக்குமிடத்து, முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் இயைபான அலுவலர்கள், தவணைதவறுநரின் பெயரும் முகவரியும் தவணைதவறுகையிலுள்ள மொத்தப் பணத்தொகையும் அடங்கிய சான்றிதழொன்றை அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட ஆள் இப்பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச் செய்வதில் தவணைதவறியுள்ளார் என்ற பயன்பாட்டிற்கு கூற்றொன்றுடன் சேர்த்து தவணைதவறுநர் வதிகின்ற அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். தவணைதவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து சான்றிதழானது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தவிசாளரினதும் பணிப்பாளர் சபையினதும் ஒவ்வொரு பணிப்பாளரினதும் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவான் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் கிடைக்கப்பெற்றதன்மேல், குறித்துரைக்கப்படவேண்டியதொரு தேதியன்று மாறும் தவணைதவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டுத் தொகையையும் அல்லது அறவீட்டின் அத்தகைய பாகத்தையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவின் தொகையை அறவிடுவதற்காக ஏன் தவணைதவறுநருக்கெதிராக வழக்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காண்பிக்குமாறு தவணைதவறுநரைத் தேவைப்படுத்தி அவருக்கு அழைப்பாணை வழங்குதல் வேண்டும். காண்பிக்கப்பட்ட காரணம் கொடுப்பனவு செய்யாமைக்கான காரணத்தை விளக்குவதற்குப் போதுமானதாக இல்லை என நீதிவானுக்குத் தோன்றுமிடத்து நீதிவான் அதனைப் பதிவு செய்த பின்னர் தவணைதவறுகையிலுள்ள சமூகப் பொறுப்புடைமை அறவீட்டையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுத் தொகையையும் தவணைதவறுநரிட

மிருந்து நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றென்றாற் போன்று அறவீட்டிற்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு அறவிடப்பட்ட பணம் முதலாம் அட்ட வணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிர்வகிக்கும் அந்தந்த இயைபான அதிகாரிகளுக்கு அனுப்புதல் வேண்டும். இவர்கள் அதனைத் திரட்டுநிதியத்தில் வரவுவைத்தல் வேண்டும்.

*இப்பாகத்தின் நடைமுறைத் தேதியும் நட்டோத்திர வாதமும்.*

**6.** (1) சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங் களுக்காகவும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி 2005 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதி யன்று முடிவடைவதுமான காலப்பகுதியின்போது சமூகப் பொறுப்புடைமை அறவீடாக முதலாம் அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களை நிருவகிக்கும் இயைபான அதிகாரிகளால் ஏதேனும் தொகை திரட்டப்பட்டுள்ளவிடத்து அவ்வாறு திரட்டப்பட்ட சமூகப் பொறுப்புடைமை அறவீடானது செல்லுபடியான முறையில் திரட்டப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அந்ததந்த இயைபான அதிகாரிகள் மேற் படி அறவீட்டைத் திரட்டுதல் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல் லது குற்றவியல் நடவடிக்கையிலிருந்து இத்தால் நட்டோத்திர வாதம் செய்யப்படுகின்றனர்.

## பாகம் II

### பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டை விதித்தல்

*பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டை விதித்தல்.*

**7.** கொள்வனவாளர் அத்துடன் விற்பனையாளர் ஒவ்வொரு வரிடமிருந்தும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஆண்டிலிருந்தும் அத்துடன் அதன் பின்னர் ஒவ்வோர் ஆண்டிற் கும் பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு என அழைக்கப்பட வேண்டிய அறவீடொன்று பங்குதொகுதிப் பரிவர்த்தனையொன் றின் மூலமாக நடாத்தப்படும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றின் மொத்த வரவின்மீதும் 0.2 சதவீதப்படி விதிக் கப்படுதல் வேண்டும்.

*பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு இயைபான பங்குத்தரகர் முதலான வர்களினால் திரட்டப்படுதல் வேண்டும்.*

**8.** அவ்வாறு சுமத்தப்படும் பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு விடயத்திற்கேற்ப அத்தகைய பங்குக் கொடுக்கல் வாங்கலை செலுத்தித் தீர்ப்பதற்குப் பொறுப்பான இயைபான பங்குத் தரக ரால், பங்குத்தொகுதி வியாபாரியால் அல்லது வங்கிக் காப்பாள ரால் திரட்டப்படுதல் வேண்டும். 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவ்வாறு திரட்டப்பட்ட பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு, விடயத்திற்கேற்ப அந்தந்த பங்குத்தரகரால், பங்குத் தொகுதி

வியாபாரியால் அல்லது வங்கிக் காப்பாளரால் அத்தகைய பங்குக் கொடுக்கல் வாங்கல் செலுத்தித் தீர்க்கப்படும் நேரத்தில் எந்தப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைமூலம் பங்குக் கொடுக்கல் வாங்கல் நடாத்தப் பெற்றதோ அப் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கு செலுத்தப்படுதல் வேண்டும். அப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை அவ்வாறு திரட்டப்பட்ட அறவீட்டை அத்தகைய செலுத்தித் தீர்த்தலின் தேதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

*திரட்டுதல்கள் பற்றிய விவரத்திரட்டைக் கொடுத்துத வுதல்.*

**9.** பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு எந்த வரவு தொடர்பில் பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு அனுப்பப்பட்டதோ அந்த மொத்த வரவின் கூட்டுமொத்தத்தைத் தரும் மாதாந்த கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

*அறவீட்டைச் செலுத்தத் தவறிய விடயங்களிலான நடவடிக்கை.*

**10.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் விடயத்துக்கேற்ப, எந்தப் பங்குத் தரகர், பங்குத்தொகுதி வியாபாரி அல்லது வங்கிக் காப்பாளர் 7 ஆம், 8 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டின் முழுத் தொகையையும் செலுத்தத் தவறுகின்றாரோ அந்தப் பங்குத்தரகர், பங்குத்தொகுதி வியாபாரி அல்லது வங்கிக் காப்பாளர் தவணை தவறுநர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தவணைதவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்து அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபையின் தவிசாளர் அத்துடன் ஒவ்வொரு பணிப்பாளரும் அல்லது முதன்மை அலுவலரும் இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒரு தவணை தவறுநராகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் உரிய தேதியன்று அல்லது அதற்குமுன்பு செலுத்தப்படாததான அத்தகைய அறவீடும் தவணைதவறிய தொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தவணைதவறுநரானவர், தவணைதவறுகையிலுள்ள பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டுடன் சேர்த்து பின்வருமாறு கணிப்பிடப்பட்ட மிகையிறுப்பனவொன்றையும் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும் -

(அ) எட்டாம் பிரிவின் கீழான அறவீட்டின் கொடுப்பனவுக்குரிய தேதியிலிருந்து அடுத்துறும் ஒருமாத காலப்

பகுதிக்கு அல்லது அதன் பாகத்திற்கு தவணை தவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் பத்து சதவீதப்படி ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுப்பனவுக்குரிய தேதியிலிருந்து அடுத்துறும் ஒருமாத காலப்பகுதி ஒவ்வொன்றுக்கும் அல்லது அதன் பாகத்திற்கு தவணைதவறுகையிலுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதப்படி,

ஆவதுடன் அத்தகைய மிகையிறுப்பனவானது ஆணையாளர் தலைமையதிபதியினால் திரட்டப்படுதலும் வேண்டும்.

(3) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்குத் தவணைதவறுகையிலுள்ள பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டை அல்லது அத்தகைய பாகத்தை அதன்மீது திரண்டுள்ள மிகையிறுப்பனவுத் தொகையுடன் சேர்த்து இதனகத்துப் பின்னர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான விதத்தில் அறவிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி தவணைதவறுகையிலுள்ள பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டை அதன்மீது திரண்டிருக்கும் மிகையிறுப்பனவுத் தொகையுடன் சேர்த்து அறவிடுவதற்கு எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவணை தவறுகையிலுள்ள பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரட்டியிருக்கும் மிகையிறுப்பனவுத் தொகையையும் அறவிடுவதற்கு வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னம்பற்றி தவணைதவறுநருக்கு அறிவிக்கும் அறிவித்தலொன்றை தவணை தவறுநருக்கும் வழங்கச் செய்வித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதி தவணைதவறுநருக்கு அறிவித்தலை வழங்கி ஆனால் தவணைதவறுகையிலுள்ள பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டுத் தொகையும் அதன்மீது திரண்ட மிகையிறுப்பனவுத் தொகையும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட

மூன்றுவார காலப்பகுதி கழிந்துவிட்டபோதிலும் செலுத்தப்படா திருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி தவணைதவறு நரின் பெயரும் முகவரியும் தவணைதவறுகையிலுள்ள மொத்தப் பணத்தொகையும் அடங்கிய சான்றிதழொன்றை அவ்வாறு பெயர் குறிக்கப்பட்ட ஆள் இப்பிரிவால் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவைச் செய்வதில் தவணைதவறியுள்ளார் என்ற பயன்பாட்டிற்கு கூற்றொன்றுடன் சேர்த்து தவணைதவறுநர் வதி கின்ற அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும். தவணைதவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்கு மிடத்து சான்றிதழானது பணிப்பாளர் சபையின் தவிசாளரின் பெயரையும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரினதும் அல்லது முதன்மை அலுவலரினதும் பெயரையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவான் (5) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் கிடைக்கப்பெற்றதன்மேல், குறித்துரைக்கப்படவேண்டியதொரு தேதியன்று தமது முன்னிலையில் தோன்றுமாறும் தவணை தவறுகையிலுள்ள பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டுத் தொகை யையும் அல்லது அறவீட்டின் அத்தகைய பாகத்தையும் அதன் திரண்ட மிகையிறுப்பனவின் தொகையை அறவிடுவதற்காக ஏன் தவணைதவறுநருக்கெதிராக வழக்கு நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்பதற்குக் காரணம் காண்பிக்குமாறு தவணைதவறு நரைத் தேவைப்படுத்தி அவருக்கு அழைப்பாணை வழங்குதல் வேண்டும். காண்பிக்கப்பட்ட காரணம் கொடுப்பனவு செய்யா மைக்கான காரணத்தை விளக்குவதற்குப் போதுமானதாக இல்லை என நீதிவானுக்குத் தோன்றுமிடத்து, நீதிவான் அதனைப் பதிவுசெய்த பின்னர் தவணைதவறுகையிலுள்ள பங்குக் கொடுக் கல் வாங்கல் அறவீட்டையும் அதன்மீது திரண்ட மிகையிறுப் பனவுத் தொகையையும் தவணைதவறுநரிடமிருந்து நீதிவானால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாற்போன்று அறவீட்டிற்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு அறவிடப் பட்ட பணம், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இவர் அதனைத் திரட்டுநிதியத்தில் வரவுவைத்தல் வேண்டும்.

பாகம் IIஇற்குப் பொருள்கோடல்.

**11.** சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்.

"காப்பாளர் வங்கி" என்பது இலங்கை மத்திய வங்கியால் நியமிக்கப்பட்டதும் பங்குக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கட்டுக்காப்பு சேவையை வழங்குவதுமான ஏதேனும் வங்கி என்று பொருளாகும்.

"பங்குத் தரகர்" என்பது முதலீட்டாளர்களின் சார்பில் தரகொன்றுக்குப் பிரதியீடாக பிணையங்களின் கொள்வனவு அல்லது விற்பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனும் தனியாள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருளாகும்.

"பங்குத் தொகுதி வியாபாரி" என்பது பிணையங்களின் கொள்வனவு அல்லது விற்பனை அல்லது பிணையங்களில் வியாபாரம் அல்லது பங்கு வியாபாரம் அல்லது பிணையங்களின் வியாபாரம் அல்லது பிணையங்களின் மொத்தக் கொள்முதல் ஆகிய தொழிலில் ஈடுபட்டுள்ள எவரேனும் தனியாள் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருள்படும் ; அத்துடன்

"பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை என்பது, பிணையங்கள் விற்பனைக்காக, கொள்வனைக்காக, பரிவர்த்தனைக்காக அத்துடன் அத்தகைய வியாபாரத்துடன் தொடர்புபட்ட எவையேனும் சேவைகள் உட்பட கிரமமாக முன்வைக்கப்படுகின்ற ஒரு சந்தை, பரிவர்த்தனை அல்லது வேறு இடம் என்று பொருளாகும்.";

*இப்பாகத்தின் நடைமுறைத் தேதியும் நட்டோத்திர வாதமும்.*

**12.** (1) சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி 2005 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தின்

இப்பாகத்தின் நியதிகளின்படி பங்குக் கொடுக்கல் வாங்கல் ஆணையாளர் தலைமையதிபதியால் அறவீடாக ஏதேனும் தொகை திரட்டப்பட்டுள்ளவிடத்து அவ்வாறு திரட்டப்பட்ட பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடானது செல்லுபடியான முறையில் திரட்டப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி மேற்படி அறவீட்டைத் திரட்டுதல் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையிலிருந்து இத்தால் நட்டோத்திரவாதம் செய்யப்படுகின்றார்.

## பாகம் III

### நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு

*நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு.*

**13.** ஒவ்வொரு நிருமாண ஒப்பந்தக்காரரினாலும் இலங்கையில் பயனுறுத்தப்படும் நிருமாண ஒப்பந்தம் ஒவ்வொன்றின்மீதும், 2005, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஒவ்வோர் ஆண்டுக்காகவும், அத்தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்திலிருந்து எழுவதான அவர்களின் ஒப்பந்தப் பெறுமானத்தின்மீது நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதி என அழைக்கப்படவேண்டிய அறவீடொன்று, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட விகிதங்களில் கணிக்கப்பட்டு விதிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு கணிக்கப்பட்ட நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீட்டின் சதவீதமானது, விடயத்துக்கேற்றவாறு, ஒவ்வோர் ஒப்பந்தக்காரரினாலும் அல்லது உப ஒப்பந்தக்காரரினாலும் செலுத்தப்படற்பாலதான மொத்தச் செலவின்மீது, தனிப்பட்ட உப ஒப்பந்தப் பெறுமதி, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தொகையை விடக் குறைந்ததாகவிருப்பினும், அமைந்ததாதல் வேண்டும்.

*நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டைச் சேகரிக்கும்விதம்.*

**14.** பதின்மூன்றாம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு நிருமாண ஒப்பந்தக்காரர் ஒவ்வோர் ஒப்பந்தக் கொடுப்பனவைப் பெறும் நேரங்களிலெல்லாம் (நிபமஅநி) என இதனகத்துப் பின்னர் குறிப்பீடுசெய்யப்படும் நிருமாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்துக்கு ஒப்பந்தக்காரரால் அனுப்பப்படுதல் வேண்டும்.

**15.** பதின்மூன்றாம் பிரிவின் நியதிகளின்படி ஒவ்வோர் தொடர்பிலும் அரசாங்கத்தின் சார்பில் நிபமஅ நிறுவகத் தினால் சேகரிக்கப்படும் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு, அவ்வாறு செலுத்தப்படற்பாலதான தொகைக் கணிப் பின் அடிப்படையைத் தருவதான மாதாந்தக் கூற்றொன்றுடன் சேர்த்து 13 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஒவ்வொரு மாத முடிவிலிருந்தும் பதினைந்து நாட்களினுள் திரட்டுநிதியத் துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

*நிபமஅநி, அரசாங்கத்தின் சார்பில் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டைச் சேகரித்தல்.*

**16.** அரசாங்கத்தின் சார்பில் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டைச் சேகரித்தலும் அனுப்பிவைத்தலும் தொடர்பான வழிகாட்டுநெறிகளைத் திறைசேரிச் செயலாளர் காலத்துக்குக்காலம் வழங்கலாம்.

*திறைசேரிச் செயலாளர் வழிகாட்டு நெறிகளை வழங்குதல்.*

**17.** நிபமஅநி, நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் சேகரிப்பு எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண் டின் கடைசி நாளுக்குப் பின்னர் முப்பது நாட்களினுள், திறை சேரிச் செயலாளரினாற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய தகவலைக் கொண்டுள்ள கூற்றொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

*சேகரிப்புப் பற்றிய கூற்றுக்கள் கொடுத்துதவப் படுதல்.*

**18.** நிபமஅநி, இயைபான ஒப்பந்தக்காரரர்களினால் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்து கொள்ளப்படும் ஒவ்வோர் ஒப்பந்தத்தின்மீதுமான மொத்த விற்பனை வரவு தொடர்பாக அதனால் சேகரிக்கப்படும் எல்லாத் தொகைகள் பற்றியதும் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் சேகரிப்புத் தொடர்பான கூற்றின் கணக்கிணக் கம் பற்றியதுமான பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

*சேகரிப்புப் பற்றி கூற்றுக்கள் கொடுத்துதவப் படுதல்.*

**19.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடை யனவாகவுள்ளவரும், 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் முழுத்தொகையை யும் செலுத்தத் தவறுகின்றவருமான எவரேனும் நிர்மாண ஒப்பந்தக்காரர், தவணைதவறுநரொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தவணைதவறுநர் கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, அத்தகைய கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபைத் தவிசாளர், எவரே

*அறவீட்டைச் செலுத்தத் தவறும் விடயங்களி லான வழக்கு.*

னும் பணிப்பாளர் அல்லது பிரதான அலுவலர், இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காகத் தவணைதவறுநரொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், உரிய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செலுத்தப்படாதவராகவுள்ள அத்தகைய அறவீடு, தவணைதவறியதாகவுள்ள, அறவீடொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) தவணைதவறுநர், தவணைதவறியதாகவுள்ள நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டுடன் சேர்த்து மேலதிகமாக,—

(அ) 16 ஆம் பிரிவின்கீழ் அறவீடு கொடுப்பனவு செய்யப்படுவதற்குரிய தேதியிலிருந்து அடுத்துப்பின்னரான ஒருமாதகாலப்பகுதிக்கு அல்லது அதன் பாகத்துக்குத் தவணைதவறியதாகவுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத்தொகையின் பத்துசதவீதத்திலும் ; அத்துடன்

(ஆ) பந்தி (அ) விற் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுக்குரிய தேதியிலிருந்து, ஒவ்வோர் அடுத்துப்பின்னரான ஒருமாதகாலப்பகுதிக்கு அல்லது அதன்பாகத்துக்குத் தவணைதவறியதாகவுள்ளவாறான அத்தகைய அறவீட்டுத் தொகையின் இரண்டு சதவீதத்திலும்,

கணக்கிடப்பட்ட மிகையிறுப்பானவொன்றையும் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன், அந்த மிகையிறுப்பனவு நிபமஅ நிறுவகத்தினால் சேகரிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மூன்றுமாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்குத் தவணை தவறியதாகவுள்ள நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டை அல்லது அவ்வறவீட்டின் அத்தகைய பாகத்தையும், அதன்மீது திரளுகின்ற மிகையிறுப்பனவுத் தொகையையும், இதன் பின்னர் குறித்துரைக்கப்படுகின்றவாறான முறையில் அறவிடுவதற்கான நடவடிக்கையை நிபமஅநி எடுத்தல் வேண்டும்.

(4) தவணைதவறியதாகவுள்ள நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டையும் அதன்மீது திரளுகின்ற மிகையிறுப்பனவுத் தொகையையும் அறவிடுவதற்கான எவையேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தவணைதவறிய

தாகவுள்ள நிர்மாணக் கைதொழில் உத்தரவாத நிதிய அறவீட்டுத் தொகையையும் அதன்மீது திரளுகின்ற மிகையிறுப்பனவுத் தொகையையும் அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு நிபமஅநிறுவகத்துக்குள்ள உட்கருத்தைத் தவணை தவறுநருக்குத் தெரிவிக்கின்ற அறிவித்தலொன்றை நிபமஅநி தவணைதவறுநருக்கு வழங்குவித்தல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி நிபமஅநி தவணை தவறுநருக்கு அறிவித்தல் வழங்குமிடத்து, ஆனால் தவணை தவறியதாகவுள்ள நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டுத்தொகையும் அதன்மீதான மிகையிறுப்பனவும், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட மூன்றுவாரக் காலப் பகுதி கழிந்துள்ள போதிலும்கூட செலுத்தப்படவுள்ளவிடத்து, நிபமஅநி, தவணை தவறுநர் வதிகின்ற அல்லது தொழில் கொண்டுநடாத்துகின்ற பிரிவின்மீது நியாயாதிக்கம்கொண்டுள்ள நீதிவானுக்கு, தவணைதவறுநரின் பெயரையும் முகவரியையும், தவணைதவறியதாகவுள்ள மொத்தப்பணத்தொகையையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை, அவர்களது பெயர்குறிப் பிடப்பட்ட ஆள் இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கொடுப்பனவைச் செய்வதில் தவணைதவறியுள்ளாரென்ற பொருள்படும் ஒரு கூற்றுடன் சேர்த்து வழங்குதல் வேண்டும். தவணைதவறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்கு மிடத்து, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தவிசாளர், பணிப்பாளர் சபை, மற்றும் பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் அல்லது முதன்மை அலுவலரினது பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நீதிவானானவர், (5) ஆம் உட்பிரிவின் கீழான சான்றித ழைப் பெற்றதன்மேல், குறித்துரைக்கப்படவேண்டிய ஒரு தேதி யன்று தம்முன்னர் தோன்றி, தவணைதவறியதாகவுள்ள நிர்மாணக்கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டுத் தொகையை அல்லது அவ்வறவீட்டின் அத்தகைய பாகத்தை அத்துடன் அதன் மீது திரளுகின்ற மிகையிறுப்பனவை அறவிடுவதற்காக அவருக் கெதிராக ஏன் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி தேவைப்படுத்தி தவணைதவறுநருக்கு அழைப்புக்கட்டளை வழங்குதல் வேண்டும். கொடுப்பனவு செய்யா மைக்கான காரணத்தை விளக்கும்வகையில் காட்டப்பட்ட காரணி யானது போதியதற்றதென நீதிவானுக்குத் தோன்றுமிடத்து, நீதிவான், அதனைப் பதித்த பின்னர், தவணை தவறியதாகவுள்ள நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டுத் தொகை

*யையும், அதன்மீது திரளுகின்ற மிகையிறுப்பனவுத் தொகையை யும், நீதிவானினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றென்றாற் போன்று தவணை தவறியவரிடமிருந்து அறவிடுவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும். அவ்வாறு அறவிடப்படும் பணம் நிபமஅ நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அது, திரட்டு நிதியத்துக்கு அதனை வரவுவைத்த லும் வேண்டும்.*

III ஆம் பாகத்துக்கான பொருள் கோடல்.

***20.*** *இச்சட்டத்தின் இப்பாகத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —*

*"நிர்மாண ஒப்பந்தக்காரர் என்பது, ஒரு விலைக்கேள்வயில் ஒப்பந்தக்காரராகப் பெயர்குறிப்பிடப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் என்று, அல்லது ஒழுங்கமைப்பு அல்லது ஒழுங் கமைப்புகள் என்று, அல்லது அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளின்படி நிறைவேற்றப்படும் நிர்மாணக் கட்டுவேலைகளைச் செயற்படுத்துவதற்கும், செய்து முடிப்பதற்கும், பேணுவதற்கும் பொறுப்பாகவுள்ள ஆளென அல்லது ஒழுங்கமைப்பெனத் தொழில்தரு நரினால் வேறுவகையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அல்லது ஒழுங்கமைப்பு என்று பொருளாகும் ;*

*"ஒப்பந்தப் பெறுமதி" என்பது, ஏற்றுக்கொள்ளற் கடிதங்களிற் கூறப்பட்ட, அத்துடன் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க அதன் பின்னர் சீராக்கப்பட்ட தொகை அல்லது தொகைகள் என்று பொருளாகும், சொல்லப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி, கருத்திட்டத்தை நிர்மாணிப்பதனை நிறைவேற்றுதல் தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட தனிப்பட்ட ஒப்பந்தங்களின் அல்லது பல்வேறு ஒப்பந் தங்களின் முழுமொத்தப் பெறுமதியாதல் வேண்டும் என்பதுடன், சுட்டுவேலைகளை நிறைவேற்றுவதில் உறப்படக்கூடிய உப ஒப்பந்தப் பெறுமதிகளையும், வழங் கல் ஒப்பந்தப் பெறுமதிகளையும், வழங்கல் ஒப்பந்தப் பெறுமதிகளையும், அத்தகைய வேறு நிர்மாண ஆகுசெலவுகளையும் உள்ளடக்குதலும் வேண்டும் ;" அத்துடன்*

"நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம் (நிபமஅநி)" என்பது, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1992 யூன் 10 ஆம் தேதிய ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின் மூலம் அமைக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட கைத்தொழில் பொறுப்பு முயற்சி என்று பொருளாகும்.

**21.** இச்சட்டத்தின் இப்பாகத்தினது ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2005, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இப்பாகத்தின் ஏற்பாடுகளினது நடைமுறை.*

**22.** 2005, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கி இச்சட்டம் தொடங்குகின்ற தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது, சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடாக நிபமஅ நிறுவகத்தினால் விதிக்கப்பட்டு சேகரிக்கப்படும் தொகை, அவ்வாறு செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறவீட்டின் சேகரிப்புத் தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து நிபமஅ நிறுவகத்துக்கு இத்தால் நட்டோத்தர வாதளிக்கவும் படுகின்றது.

*நட்டோத்தர வாதம்.*

## பாகம் IV

### 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்

**23.** ஈராயிரத்து இரண்டாமாண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம், அச்சட்டத்தின் 1 ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவில் (துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு), அப்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

*2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 1 ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆயின், மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி, கப்பற்கட்டளைப் பெறுமதி என்பன தொடர்பில், 2004 நவெம்பர் 19 ஆம் தேதியிலிருந்து 1.5 சதவீதத்திலான அறவீடொன்று விதிக் கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

ஆயின், மேலும் பதனிடப்பட்டு மீள ஏற்றுமதிசெய்யப்படும் நோக்கத்துக்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் பொரு ளொன்றின் விடயத்தில், அப்பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி, கப்பற்கட்டணப்பெறுமதி என்பவற்றின்மீதான அறவீடு

(அ) 2003, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கி, 2004 திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப் பகுதிக்காக 0.5 சதவீதத்தில் விதிக்கப்பட்டு அறவிடப் படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) 2005 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்காக 0.25 சதவீதத்தில் விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.".

நட்டோத்தரவாதம்.

**24.** அத்தகைய பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் கட்டளைப் பெறுமதி என்பவற்றின்மீது ஒரு சதவீதத்துக்குச் சமமான தொகையொன்று, 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் I ஆம் பாகத்திற் குறிப்பீடுசெய்யப்படுகின்ற வாறான பொருளொன்றை இறக்குமதி செய்கின்ற எவரேனும் ஆளிடமிருந்து, 2004 நவெம்பர் 19 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி யின்போது இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி துறைமுக, வானூர்தி நிலைய அறவீடாகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினாற் சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சேகரிப்பானது, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியாகச் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல், அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாத மளிக்கவும்படுகின்றது.

## பாகம் V

### பொது

**25.** (1) இச்சட்டத்தினால் விதிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அல்லது இச்சட்டத்தின்கீழ் அவைதொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றவாறான அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற வாறான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்கு விதிகள் ஆக்கலாம். *ஒழுங்குவிதிகள்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளியீட்டுத் தேதியன்று, அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியான விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறுற ஒழிக்கப்பட்டுவிட்ட தாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப் படுதல் வேண்டும்.

**26.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

### முதலாம் அட்டவணை

(பிரிவு 2)

1. மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)
2. சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)
3. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
4. 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச்சட்டம் (அத்தியாயம் XV, XVI, XVII மற்றும் பிரிவுகள் 61, 33 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர).

### இரண்டாம் அட்டவணை

(பிரிவு 13)

| | நிர்மாண ஒப்பந்தப் பெறுமதி | அறவீட்டைக் கணக்கிடுவதற்கு ஏற்புடையற்பாலனவான வீதங்கள் |
|---|---|---|
| 1. | நிர்மாண ஒப்பந்தத்தின் பெறுமதி பதினைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவுள்ளவிடத்து | இல்லை |
| 2. | நிர்மாண ஒப்பந்தத்தின் பெறுமதி பதினைந்து மில்லியன் ரூபாவுக்குக் குறையாமலும் ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாமலும் இருக்குமிடத்து | 0.25 சதவீதம் |
| 3. | நிர்மாண ஒப்பந்தத்தின் பெறுமதி ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக்கு குறையாமலும் நூற்றியம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாமலும் இருக்குமிடத்து. | 0.5 சதவீதம் |
| 4. | நிர்மாண ஒப்பந்தத்தின் பெறுமதி நூற்றியம்பது மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட இருக்கமிடத்து. | 1 சதவீதம் |

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*